# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No. 151/2017

**2023 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 3 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி எம். மணிமேகலை, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர் •** | **:** | **துரைசாமி** | **தொழில்** | **:** | |
| **தந்தை பெயர்** | **:** | **சுப்பிரமணி** | **கிராமம் •** | **:** | |
| **வயது •** | **:** | **66** | **வட்டம் •** | **:** | **காஞ்சிபுரம்** |
| **நேரம் •** | **:** | **முற்பகல் 12.55** | **•** | **:** | |

**வா.சா 1 முதல் விசாரணை தொடர்ச்சி**

கடந்த 17.11.1960 தேதியிட்ட வேங்கையம்மாள் என்பவருக்கு ருக்மணி அம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அந்த கிரைய ஆவணத்தின் **சான்றிட்ட நகல் வா.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 31.12.1962 தேதியிட்ட வெள்ளை நாயக்கருக்கு சிங்கராச்சாரி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அந்த கிரைய ஆவணத்தின் **சான்றிட்ட நகல் வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.12.1997 தேதியிட்ட சுந்தரம்மாள் வகையாரா என்பவரிடமிருந்து நான் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட **நகல் வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.04.2003 தேதியிட்ட பட்டா எண் 4 க்கான என்பெயரில் உள்ள பட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த பட்டா சான்றிட்ட நகல் **நகல் வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்கண்ட ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று கூறி அந்த ஆவணத்தை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்)

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

காஞ்சிபுரம்